# செந்தமிழ்

தொகுதி: 92 மே 1998 பகுதி: 5

திங்கள் இதழ்

முதன்மை ஆசிரியர் மா.தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் நா. பாலுசாமி

எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்
முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ. கந்தசாமி
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி, தஞ்சாவூர்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி
செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்.

பேரறிஞர் ச. மெய்யப்பன்
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேரறிஞர் சி. கதிர் மகாதேவன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேராசிரியர் கு. துரைராசு
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ. மணவாளன்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

பெரும்புலவர் இரா. இளங்குமரன்
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேராசிரியர் ந. பொன்னப்பன்
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. பத்மா சீனிவாசன்
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம். கமால்
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பேராசிரியர் சே. அரிராமநாதன்
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

# செந்தமிழ்

## திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ: 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

முதன்மை ஆசிரியர் *மா.தனுக்கோடிபாண்டியன்* பி.ஏ.,பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

ஆசிரியர் பேரறிஞர் *நா. பாலுசாமி*
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

# பொருளடக்கம்


1. **எல்லோர்க்கும் தொல்காப்பியம்** *152*
*பேரறிஞர் நா. பாலுசாமி*
*(மதிப்புறு பேராசிரியர், உயர் ஆய்வு மையம், மதுரைத் தமிழ்ச் சங்கம்)*

2. **நூலாராய்ச்சி முறை - ஆங்கிலமும் தமிழும்** *156*
C.P. *வெங்கடராம ஐயர்*

3. **சுவடிப்பதிப்பாய்வில் ஆமையர் அம்மானை** *171*
*மொ. மருதமுத்து, சென்னை - 12.*

4. **சிந்தனைக்குச் சில குறட்பாக்கள்** *180*
*நாபா, மதுரை.*

# எல்லோர்க்கும் தொல்காப்பியம்

- பேரறிஞர் நா. பாலுசாமி

(முன்இதழ்த் தொடர்ச்சி)

(தொல்-சொல்-வினை)

## சூத்திரம் 202

(தன்மைப் பன்மை வினைமுற்று)

அவைதாம்
அம்ஆம் எம்ஏம் என்னும் கிளவியும்
உம்மொடு வரூஉம் கடதற என்னும்
அந்நாற் கிளவியோடு ஆயெண்கிளவியும்
பன்மை உரைக்கும் தன்மைச் சொல்லே

(ப.ரை) அம்ஆம் எம்ஏம் - அம்ஆம், எம்ஏம், என்னும் கிளவியும் - என்பனவற்றை இறுதியில் கொண்டுள்ள வினைச் சொற்களும், உம் ஒடு வரூஉம் - உம் என்பதனை இறுதியில் கொண்டுள்ள, கடதற - கடதற என்னும் மெய்யெழுத்துக்களை (கும்டும்தும்றும்) உடைய வினைச் சொற்களும், அ நால் கிளவியோடு - அந்த நான்கு சொற்களுடன் கூடிய, அ எண் கிளவியும் - அவ்வாறு கூடிய எட்டு வினைச் சொற்களும், பன்மை உரைக்கும் - உயர் திணையில் பலர்பால் உணர்த்தும் தன்மைச் சொல் - தன்மைச் சொற்களாம்.

அம்ஆம், எம், ஏம், கும், டும், தும், றும் என்பனவற்றை இறுதியில் கொண்டுள்ள எட்டு வினைச் சொற்களும் உயர்திணையில் தன்மை இடத்தை உணர்த்திவரும் பலர்பால் விகுதிகளைப் பெற்ற வினைச் சொற்களாம்.

(வி.ரை.) கிளவி - ஈற்றில் நிற்கும் விகுதிகள், வரூஉம் - அளபெடை உம் ஊர்ந்த கடதற - க்+உம்+கும், ட்+உம்+டும், த்+உம்+தும், ற்+உம்+றும் (அஃதாவது, கும், டும், தும், றும் என்னும் வினைவிகுதிகள். 'அ' நீண்டு,

'ஆ' ஆனது. இவ்வாறு வருவனவெல்லாம் உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களாம். ஏ-அசை, அம், ஆம் - முன் நிற்பவரை உளப்படுத்தும், எம், ஏம் என்பன - படர்க்கையாரை உளப்படுத்தும். கும், டும், தும், றும் என்பன முன்னிற்போர், படர்க்கையோர் ஆகிய இருவரையும் உளப்படுத்தும். அம் ஆம்; எம், ஏம் - இவை நான்கும் மூன்று காலம் பற்றியும் வரும்; கும், டும், தும், றும் - இவை வருங்காலம் பற்றி வரும்.

(எ-டு) அஞ்சினம் அஞ்சினாம் (அம் ஆம்)
அஞ்சினெம், அஞ்சினேம் (எம்ஏம்) } இறந்த காலம்
உண்கின்றனம், உண்ணாநின்றாம் (அம்ஆம்)
உண்கின்றனெம், உண்ணா நின்றேன் -(எம்ஏம்) } நிகழ் காலம்

உண்குவம் - (அம்)
உண்குவாம் - (ஆம்)
உண்குவெம் (எம்)
உண்குவேம் (ஏம்) } வருங்காலம்

உண்கும் (கும்)
உண்டும் (டும்)
வருதும் (தும்)
சேறும் (றும்) } வருங்காலம்

## சூத்திரம் 203

(தன்மை ஒருமை வினைமுற்று)

கடதற என்னும்
அந்நான்கு ஊர்ந்த குன்றிய லுகரமொடு
என் ஏன் அல்என வரூஉம் ஏழும்
தன்வினை உரைக்கும் தன்மைச் சொல்லே

(ப.ரை) கடதற என்னும் - கடதற என்னும், அ நான்கு - அந்த நான்கும், ஊர்ந்த - ஏறிய, குன்றிய லுகரம் ஒடு - குற்றியலுகரத்துடன், என் ஏன் அல் - என் ஏன் அல், எனவரூஉம் - என வருகின்ற ஏழு இறுதி நிலைகளும்,

தன்வினை உரைக்கும் - உயர்திணையில் ஒருமையை உணர்த்தும், தன்மைச் சொல் - தன்மை வினைச்சொற்களாம்.

குடுதுறு என்னும் நான்கனோடு என், ஏன், அல் என வரும் மூன்றும் சேர்தலால் வரும் ஏழு இறுதி எழுத்துக்களும் உயர்திணைத் தன்மை ஒருமை வினைமுற்றுக்கு உரியவாம்.

(வி.ரை) வரூஉம் - அளபெடை, தன்வினை - தன்மை வினை, ஒருமை (ஒன்று) உணர்த்தும் வினையாம். இச்சூத்திரத்தில் உயர்திணைத் தன்மை ஒருமை வினை முற்றுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இறுதிநிலை - விகுதி

(எ-டு) உண்கு, உண்டு (உண்பேன்) வருது (வருவன்), சேறு (செல்வேன்) (குடுதுறு வந்தமை காண்க)
உண்குவென் (என்), உண்பேன் (ஏன்), உண்பல் (அல்) எனவும் வரும். (முறையே என், ஏன், அல் விகுதிகள் வந்தவாறு காண்க)

## சூத்திரம் 204

(செய்கு என்னும் வாய்பாட்டு வினை)

அவற்றுள்
செய்குஎன் கிளவி வினையொடு முடியினும்
அவ்வியல் திரியாது என்மனார் புலவர்

(ப.ரை) அவற்றுள் - மேலே கூறிய ஏழனுள், செய்கு என் - செய்கு என்னும் வாய்பாட்டு, கிளவி - வினைச்சொல், வினையொடு - வினைமுற்றோடு முடியினும் - முடிவுபெற்றாலும், அ இயல் - அந்த வினைமுற்று என்னும், இயல் - தன்மையினின்று, திரியாது - மாறுபடாது, என்மனார் - என்று கூறுவர், புலவர் - இலக்கண நூலோர்.

செய்கு என்னும் வாய்பாட்டு வினைமுற்று மற்றொரு வினைமுற்றுக் கொண்டு முடியினும், அது வினையெச்சமாகாது. வினைமுற்றாகவே கொள்ளல் வேண்டும்.

(வி.ரை) செய்கு - செய்வேன். இது ஒரு வாய் பாட்டுவினை எனப்படும். வாய்பாடு - உத்தி, முறை, மரபு, என்மனார் - (என்+மன்+ஆர்) என்பது என்ப என்ற வினையின் திரிபாகும். மன், ஆர் - இரண்டும் சாரியைகள்.

(எ-டு.) காண்கு வந்தேன் - இத்தொடரில் காண்கு, வந்தேன் இரண்டும் வினைமுற்றுகளே. ஒரு தொடரில் இரண்டு வினைமுற்றுகள் வந்தால், ஒன்றனை எச்சமாக்கிப் பொருள் கொள்ளவேண்டும் என்பது விதி. இவ்வாறு வரும் எச்சம் முற்றெச்சம் எனப்படும் (முற்றாக இருப்பினும் எச்சப் பொருள் கொள்ளப்படும்). ஆனால் செய்கு என்னும் வாய்பாட்டு வினைமுற்று, மற்றொருமுற்றுச் சொல் கொண்டு முடியினும், எச்சமாகாமல் முற்றாகவே நிற்கும் என்பது இச்சூத்திரத்தின் கருத்து.

(தொடரும்)

| பிழை | திருத்தம் |
|---|---|
| இருக்காது | இராது |
| முயற்சித்தான் | முயன்றான் |
| இயக்குனர் | இயக்குநர் |
| சில்லரை | சில்லறை |
| எண்ணை | எண்ணெய் |
| ஓட்டுனர் | ஓட்டுநர் |
| நடத்துனர் | நடத்துநர் |

# நூலாராய்ச்சிமுறை - ஆங்கிலமும் தமிழும்

**- C.P. வெங்கடராம ஐயர்**

*"ஆவியந்தென்றல்வெற்பினகத்தியன் விரும்புந்தென்பால்*
*நாவலந்தீவம்போற்றி நாவலந்தீவந்தன்னுண்*
*மூவர்கட்கரியானிற்பமுத்தமிழ்ச்சங்கத்தெய்வப்*
*பாவலர்வீற்றிருக்கும் பாண்டி நன்னாடு போற்றி"*

அமிழ்தினுமினிய தமிழ்மடவரல்செய் யருந்தவத்தின் பயனேயென்னும்படி தோன்றி நெடுநாளாகப் படிப்போருங் கெட்போரு மற்று ஏட்டுப்பிரதிகளிற்கிடந்த சிறந்த பழங்காப்பியங்களை யாவருங்களிப்புடன்கற்கும்படி உரை, அபிதான விளக்கம், ஆராய்ச்சிவிளக்கம், மேற்கோளகராதி முதலிய மிக்க உபயோகமான ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் பதிப்பித்துத் தந்தவர்களும், நூலாராய்ச்சியிலும் கல்வியிலும் மேம்பட்டும் நற்குண நற்செய்கைகளாற்றிகழ்வுற்றும், புலவர் திலகமாக வீற்றிருக்கும் மகாஉபகாரியாகிற மஹாமஹோ பாத்தியாய பிரஹ்ம உ.வே. சாமிநாதையரவர்கள் முன்பாகவும், இன்னும் அநேதபண்டிதர்கள் முன்பாகவும், 'உரைப்பார் வாயுரைப்பவை தம் புகழேயாம்படி யுயர்ந்து' அரிய பெரிய காரியங்களையெல்லாம் மிகத் திருத்தமாகச் செய்தும் பாஷாபிவிருத்தியில், தமது முழுக்கவனத்தைச் செலுத்தியும் புகழ்பெற்ற 'குன்றாநல்லிசைச்சென்றோரும்பலாகி' 'தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையார்' அளவளாவிப்பேசி மகிழும்படி எல்லாச் சௌகரியங்களையும் அமைத்துதவும் ஸேதுபதியவர்கள் முன்பாகவும் சிற்றறிவினேன் நூலாராய்ச்சி என்ற விஷயத்தைப்பற்றி உபந்யஸிக்கப்புகுந்தது, 'கற்பனவூழற்றார் கல்விக் கழகத்தாங்கு' என்று தொடங்கிய செய்யுட்பயனுக்கு ஓர் இலக்கியமாவதையொக்கும், எனினும், 'அறையுமாட ரங்கும்மடப் பிள்ளைகள், தறையிற்கீறிடிற்றச்சர்' கோபியார்களாதலாலும், 'புல்லாவெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி, கல்லாவொருவனுரைப்பவுங் கண்ணோடி, நல்லார் வருந்தியுங்கேட்பர்' என்ற தைரியம் பற்றியும்,

இம்மஹாஸபையின் கண் இன்று எழுந்து நிற்கத் துணிந்தேன். எடுத்துக் கொண்ட விஷயத்தின் பெருமையையும் என் சிற்றறிவையும் உய்த்துணரவல்ல பெரியோர்கள் இதில் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூன்றாம் வருஷக் கூட்டத்தில் வாசிக்கப் பெற்றது. (செந்தமிழ் நவம் - டிசம்பர் 1914)

## நூலாராய்ச்சி

ஒவ்வொரு தேசத்துப்பாஷா சரித்திரத்திலும், நூலாராய்ச்சி என்பது அநேக நூல்கள் தோன்றிய பிறகே முன்னுக்குவரும் ஒரு கல்வி விசேஷமாம், நூலாராய்ச்சியின்நோக்கம் "நூல்நுட்பம்" கொள்வதாம். எனவே, பழைய நூல்களிற் காணக் கிடக்கும் அரியவுண்மைகளை ஆதாரமாகக் கொண்டு அவற்றை உரையாணியாக வைத்து மற்ற நூல்களின் அருமை பெருமைகளையுய்த்துணர்வதே ஆராய்ச்சிக்குப் பொருத்தமான வழியாகும். உலகத்தில் மனிதர்களின் நடையுடைபாவனைகளிற் சிலவற்றை யிழிந்தகுணங்களென்றும் சிலவற்றைச் சிறந்த குணங்களென்றும் யாவருஞ் சொல்லுவார்கள். இவ்வுணர்ச்சியையே உரையாணியாகக் கொண்டு மனிதர்நடை நல்லதென்றும் கெட்டதென்றும் நாம் ஆராய்கிறோம். அது போலவே சில சிறந்த நூல்களிற் காணக்கிடக்கும் அழகிய குணவிசேஷங்களைக் கண்டனுபவித்த பெரியோர்கள் மற்ற நூல்களைப் படிக்கும்போது தாம் பழைய நூல்களிற்கண்ட குணவிசேஷங்கள் புதிய நூல்களிலும் இருக்கின்றனவாவென்று ஆராய்ந்து பார்த்தே புதிய இலக்கியத்திறமையை எடுத்துரைப்பார்கள். நூல்கள் இத்தன்மையனவென்று ஆராய்ந்துனுபவித்தலே ஆராய்ச்சி செய்வபவர்களுடைய கடமையாகும்.

## நூல்கள்

'உரத்தின்வளம்பெருக்கியுள்ளியதீமைப், புரத்தின் வளமுருக்கி' 'மாந்தர்மனக்கோட்டந்தீர்க்கும்' காரணத்தாலும், 'நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவுநிலைமை'யைத்

தருவதாலும் நூல்களைவாசித்தே நாம் ஒழுக்கத்தில் மேம்பட வேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். இத்தகைய நூல்களின்றொகுதியே பாஷையெனப்படும். உலகத்திற் காணக்கூடிய உண்மைகளை நூல்கள் நமக்கு இரண்டு விதங்களாகத் தெரிவிக்கின்றன. இவற்றை முறையே பொறியுணர்ச்சியால் தெரிந்து கொள்ளக் கூடியவுண்மைகள் என்றும், மனவுணர்ச்சியால் அறியக்கிடக்கின்ற உண்மைகள் என்றும் பிரிக்கலாம். விழிகளாலும் மற்றப் பொறிகளாலும் அறியக்கூடியவை ஸாமான்யமானவை. மனத்தாலாராயக் கிடப்பனவே அரியவுண்மைகள். காதுக்கு இனிமைபயக்கும் ஓசை நயத்தை முதல் வகுப்பினும், மனத்திற்குத் திருப்தியை உண்டுபண்ணி இத்தேசத்திலும் பிறதேசங்களிலுமுள்ள புலவர்கள் உலக விஷயங்களை எவ்வாறு உணர்த்தார்களென்று தெரிவிப்பதை இரண்டாவது வகுப்பிலும் சேர்க்கலாம். இவையிரண்டும் நூல்களுக்கு இன்றியமையாதவை. எல்லாரும் எளிதிலறிந்து ஞாபகத்தில் வைத்துக் கொள்ளக் கூடியதும் பிறருக்குத் தெரிவிக்கக் கூடியதுமாக அமைவது ஓசை நயமே. நூல்களில் ஓசைநயம் அமைந்திருக்க வேண்டுமென்று எமர்ஸன் என்ற ஆங்கில வித்வான் அடியில் வருமாறு வற்புறுத்துகின்றார்.

"நாமெல்லாரும் ஸங்கீதத்திற் பிரியமுள்ளவர்களாகவே இருக்கிறோம். ஒரேசத்தமோ அல்லது வேறுவேறுசத்தங்களோ ஒழுங்காகவும் முறைமுறை திரும்பிவரக்கேட்பதில் நம்மனம் செல்லுகின்றது. குழந்தை தாலாட்டைக்கேட்டுத் தூங்குகின்றது. போர்வீரன் யுத்தபேரிகைகளைக்கேட்டு வீரத்தன்மையில் மேம்படுகிறான். காலவரையறை இதயத்தின் ஓசையிலிருந்து உண்டாகின்றதென்னலாம். நவரஸங்களையும் செம்மையாகத் தெரிவிப்பதற்குப் பொருத்தமான ஓசைகளும் அவ்வோசைகளை நிரப்புவதற்குரிய வாக்கியங்களும் தாமே இனிதின் அமைவன. சொல்லும் பொருளும் போலவும் பூவும் மணமும்போலவும் அவை பிரியாதன." ஆதலால் இவற்றின் உதவியாலேயே அரிய பெரிய கருத்துக்களை எடுத்துரைத்தல் எளிதாகும்.

## *ஆராய்ச்சி*

இனி, மனத்தாலாராய வேண்டிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள மூன்று முக்கியமான வழிகளுண்டு, நூல்களை ஆராய்ச்சி செய்பவர்கள் ஒவ்வொரு நூலிலும் மூன்று விஷயங்களைக் காண முயற்சி செய்ய வேண்டும்.

முதலாவது விஷயத்தின்பெருமை அதாவது மனத்தாலாராய்ந்தறிய வேண்டிய நுண்ணியவுண்மைகளை நூல் தெரிவிக்கின்றதாவென்று கவனிக்கவேண்டும்.

இரண்டாவது எடுத்துச்சொல்லும்விதம், அதாவது எடுத்துக் கொண்ட விஷயத்துக்கும் நூல்வகைக்கும் பொருத்தமான முறைப்படி விஷயங்கள் தகுந்த விதமாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும்.

மூன்றாவது, நூல் இன்பம் பயக்கின்றதாவென்று கவனிக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு விஷயமும் உள்ளது உள்ளவாறே படிப்பவர் மனத்திற்றோன்றுமாறு எடுத்துக் காட்டப் பெற்றிருக்கின்றதாவென்றும், அவை படிப்பவர்க்கு ஆனந்தத்தையுண்டு பண்ணுகின்றனவாவென்றும் ஆராயவேண்டும்.

முதலது: சிறந்த அறிவாளரென்று யாவரும் ஒப்புக் கொண்ட புலவர்கள் கூறியவற்றை நாம் விஷயங்ளைத் தெரிந்து கொள்வதன் பொருட்டு ஆராய்கின்றோம். மற்றவர்கள் இயற்றிய நூல்களை ஆராய்ச்சி செய்வது அவர்தம் நூல்களைச் சீர்த் தூக்கிப் பார்ப்பதன் பொருட்டே, 'முன்னோர் மொழி பொருளேயன்றியவர் மொழியும், பொன்னெ போற்போற்றுவது' வழி நூலுக்கும் இலக்கணமாதல் பற்றிப் புதிய நூலைப் பழைய நூலோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மரபு. இவ்வாறு ஆராய்ச்சி செய்வதில் விஷயத்தின் பெருமையையறிய உரையாணியாக உள்ளது உண்மை. நூலிற்சொல்லப் பெற்ற விஷயம் யாவரும் ஒப்புக் கொள்ளும்படியான பழையவுண்மையாக இருத்தல் வேண்டும். செய்யுளில் எடுத்துரைக்கப் பெறும் உண்மைக்கும் தேசசரித்திரம் வியவகாரம் முதலியவற்றைக் கூறும் உண்மைக்கும்

தன்மையில் வித்தியாஸமுண்டு. அதாவது நியாயஸ்தலத்திற் சாக்ஷி சொல்வது போலத் தேசசரித்திரத்தில் உண்மை விரவிவரும். மற்ற நூல்களோ அவ்வுண்மைகள் ஆசிரியர் மனத்துக்கும் மற்றவர் மனத்துக்கும் எவ்வாறு புலப்பட்டன என்பதைத் தெரிவிப்பன. ஆதலால் முக்கியமானதென்று எடுத்துக் கொண்ட சிறந்ததோர் உண்மையை மட்டும் விஸ்தாரமாக எடுத்துச் சொல்லி அதனை நடுநாயகமாகவும் மற்றவுண்மைகளை ஸாமான்யமாகவும் நூல்களிற்பாவிப்பது முறை, ஏனென்றால், தேச சரித்திரத்திற் சொல்லப் பெற்றவர்கள் உண்மையில் அநேக குணங்குற்றமமைந்தவர்கள். ஆனால், காப்பியத் தலைவன் முதலியோர்களோ தன்னிகரில்லாத தலைமையும் சீலமுமுடையவர்கள். உலகத்தில் யாவரும் உயர்த்திப் பேசும்படியான சிறந்த நற்குணங்கள் யாவும் திரண்டு வடிவமெடுத்து உலாவியதென்று எண்ணும் படியாகவே நூல்களில், தலைவன் தலைவியர் கூறப்படுவர். தலைவன் தலைவியர் தமக்குள் இருக்க வேண்டிய அன்பு, ஆண்டானடிமைத்திற முதலிய சிறந்தநற்குணங்களுக்கு இலக்கியங்களை இதிகாச புராணங்களுக்குள்ளேயே நாம் தேர்ந்தெடுக்கின்றோம். 'கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை' என்றவிடத்துக் கொடை விசேஷமமைந்த பறம் பிற்கோமானாகிய பாரியே பாராட்டப் பெற்றிருக்கின்றான்.

தலைவன் வெளியே பொருள் வயிற்பிரிந்திருக்க நேர்ந்தபொழுது அவன் வருமளவும் அவன்க்ஷேமத்தை உத்தேசித்து நோற்றுக்கொண்டு அவன் வரவை அதிக ஆவலோடு எதிர்பார்த்துத் தனித்திருக்கும் தலைவியைப் பற்றிக் கூறுமிடத்து, ஸாமான்ய உதாரணங்களை எடுத்துச் சொல்லுவதைவிட, 'பாசறைத்தொழில் விறல்தந்து இன்னே முடிக' என்ற கொற்றவையைப் பரவும் நெடுஞ்செழியன்றேவியையே எடுத்துச்சொல்லுதல் தக்கது.

இரண்டாவது: நூல்களில் விஷயத்துக்கேற்ற விதமாக நடையும், ஓசையும், நூற்பரப்பும் அமைந்திருக்கின்றனவா என்று கவனிக்க வேண்டும். ஒரு குறித்த விஷயம் அல்லது

உண்மையையே முக்கியமாகக் கொண்டு எழுதப்புகும் கவி தான் எடுத்துக் கொண்ட விஷயத்துக்கேற்றவிதமாக நூலை வரையறுத்துக் கொண்டு எதை அதிகச் சிறப்பாகச் சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சிறப்பித்துச் சொல்லி, தனது கருத்து, படிப்பவர் மனத்திற்பதியும்படி இடத்துக்கேற்றவாறு இசை நயத்தையும் அமைத்து விளக்க வேண்டும். இந்தச் சிறப்பு, கவிஞரிடத்திற்றோற்ற வேண்டுமானால் அவர்கள் தாமே நூலாராய்ச்சியில் வல்லுநராக இருத்தல் வேண்டும். தமிழ்ப் பாஷையில் அநேக கவிஞர் ஆராய்ச்சியிலும் வல்லுநராக இருந்தார்கள் என்பதற்கு அவர்கள் இயற்றிய நூல்களில் மேற் சொன்ன நயங்கள் மிக்கிருப்பதே தக்க சான்றாகும். இந்நயங்கள் செவ்வனே அமைய இசையும் பதமும் மிக்க உபயோகமாக இருக்கின்றன. ஆதலாற் கவிகள் பதங்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

சுக்கிரீவன் இலக்குமணனை உண்ணுமாறு வேண்ட, உண்ணுவதற்கொப்பாத இலக்குமணன் கூறிய,

"வருத்தமும்பழியுமேவயிறுமீக்கொள
இருத்துமென்றாலெக்கினியதியாவதோ
ரருத்தியுண்டாயினுமவலந்தான்றழீஇக்
கருத்துவேறுற்றபினமிழ்துங்கைக்குமால்"

(கிஷ்-கிஷ்கிந்தைப்படலம்)

என்ற செய்யுளிலுள்ள ஒவ்வொரு பதமும், இலக்குமணன் துயரத்தின் அளவைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. விசையை நந்தட்டனையும் சீவகனையும் அருகேயணைத்து நற்புத்தி சொன்னதைக் கூறுவனவாகிய 'சீறகராற்பார்ப்புப்புல்வித் திருமயிலிருந்ததேபோல்' என்றற்றொடக்கத்து வார்த்தைகள் அவர்கள் அன்பையும் அவர்கள் ஆலோசித்த விஷயத்தின் அருமையையும் தெரிவிக்கின்றன. 'தூம்பியாதுமில்லாக்குளம் போன்றதென்றோமில்பண்டம்' என்றற்றொடக்கத்தனவற்றில் உள்ளவார்த்தைகள் சீவகன்வரும் வரையில் ஸாகரதத்தன் கடையில் வியாபாரமே நடக்கவில்லையென்ற விஷயத்தைச் செவ்வனே தெரிவிக்கின்றன. இடத்துக்கேற்றபடி செய்யுளும் ஓசையும் இனிதினமைவதைச் சிறந்ததமிழ் நூல்களிற் பரக்கக்

காணலாம். "பெண்ணுக்கணிகலமே பேரழுகுக்கோருருவே" என்று தொடங்கிய கந்தபுராணச் செய்யுளில் உள்ளவார்த்தைகள் விருத்தையிறந்ததைக் குறித்து அவள்தோழியர்வருந்துவதை உள்ளவாறு புலப்படுத்துகின்றன. விரிவஞ்சி அதிக உதாரணங்களை எடுத்துக் கொள்ளவில்லை.

மூன்றாவது: நூலில் மனத்தாலாராய்ந்தனுபவிக்கத்தக்க குண விசேஷங்களில் நூலின் வெளித்தோற்றத்தால் அழகும் பொருளால் இன்பமும் தோன்றும், சொல்லழகும் பொருளின் மேன்மையும் பிரியாதன.

"சேலனைய சில்லரியகடை சிவந்துகருமணியம்
பாலகத்துப்பதித்தன்ன (படியவாய்முனிவரையும்
மாலுறுப்பமகிழ்செய்வமாண்பினஞ்சுமமிர்தமுமே
போல்குணத்தபொருகயற்கண் செவியுறப்போந்தகன்றனவே"
(சீவக-நாமக)

என்றசெய்யுளில் நூலாசிரியர் மனத்திற் கொண்ட கருத்தைப் புலப்படுத்துவோராகிய ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'மாயோனையும் பாற்கடலையும் முகத்தேவைத்தபடி; கருமணியைப் பாலிற்பதித்தாற் பால் நிறம் கெடும் என்றறிக' என்று விசேஷவுரை எழுதியுள்ளதிலிருந்து அறியக்கிடக்கும் உண்மைகள் பல.

நூலை முடிக்கும்போது ஒரு ஸந்தோஷச் செய்தியோடு முடிக்க வேண்டுமென்று கவிஞர் எண்ணுவார்கள். ஆன்ம கோடிகளுக்கு இன்பமே பயக்கும் ஈசன் ஒருவன் உளன் என்ற உண்மையை விளக்க வேண்டி அவர்கள் இவ்வாறு நூலை முடிக்கிறார்கள். சிலப்பதிகாரத்தைப்போல வேறுவகையாக முடிவு பெறும் நூல்களில், கவிஞர் உலகத்தில் துன்பத்துக்குக் காரணம் 'தற்செய்த கிழவனை நாடிக்கொளற்குவல்லதாய தொல்லைப்பழவினையே' என்றுகூறி உத்தம நீதிகளைச் சொல்லுவார்கள்.

இப்படி விஷயத்தின் பெருமையையறிய உண்மையும், விஷயம் அடங்கியிருக்கும் உறுப்பாகிய செய்யுள் நடையையுணரத் தகுதியும், மனத்தாலாராய்ந்தறிந்துகளிக்க வேண்டிய சிறப்புக்களையுணர அழகும் நூலாராய்ச்சி செய்யும் புலவர்களுக்கு உரையாணிகளாக அமைகின்றன.

சிறந்த நூல்களைப் படிக்குந்தோறும் நமதுமனம் யாதொரு தடையுமின்றிக் கவியின்மனத்தூடு செல்லுகின்றது. அப்போது சில அரியவுண்மைகள் ஆசிரியர் மனத்துக்குத் தோற்றியவாறே படிப்பவர் மனத்துக்குந்தோற்றும். இந்தப்பழக்கத்தைக் கொண்டு மற்றப் புத்தகங்களிலும் இப்படிப்பட்ட சிறப்பு இருந்தால் அந்நூல்களில் விருப்பமும் இல்லாவிட்டால் வெறுப்பும் தோற்றும். கவியின் சிறந்த குணங்களிற்களிப்பும் சிறந்தவையல்லாத குணங்களில் வெறுப்புந்தோற்றுவது ஒருவருக்குப் பாஷையிற் சுவையிருக்கின்றதென்பதைத் தெரிவிக்கும்.

ஸாமான்யஸங்கதிகளையும் கவிகள் எவ்வாறு எடுத்துச் சொல்லுகிறார்களென்பதை ஆராய்வதில் நாம் மனமகிழ்வோம். யாற்று நீர் ஸமுத்திரத்திற்கலப்பதைக் கவிகள் எடுத்துச் சொல்வதில் விசேஷ நயங்கள் தோற்றுகின்றன.

"திரைபொருகனை கடற்செல்வன் சென்னிமேல்
நுரையெனுமாலையை நுகரச்சூட்டுவான்
சரவெனும்பெயருடையத்தடங்கொள்வெம்முலை
குரைபுனற்கன்னிகொண்டிழிந்ததென்பவெ" (சீவக.)

என்ற செய்யுளினும்,

"நால்வகை மலர்சேரைம்பான தியெனும்பருவக்கன்னி
கால்வழிக்கலிங்கமார்ப்பக்கன தனம்பணைப்பப்பாங்கின்
பால்வளைத்திரைக்கைவீசிப்பன்மலர்த் தொடைகள்சூடிச்
சேல்விழிகளிப்பவேலைச் செல்வனை மணந்ததன்றே"
(திருக்குற்றால. . .. திருநதி.)

என்ற செய்யுளிலும், இயற்கை எவ்வளவு அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளது?

இவ்வாறு நூல் நுட்பங்களையறியச் சிறந்த கருவியாக உள்ளது நூலாராய்ச்சியாதலால் இது ஆங்கிலத்திலும் தமிழிலும் எவ்வாறு செய்யப் பெற்று வந்ததென்பதை யோசிப்போம். இப்படி யோசிப்பது அவ்வப்பாஷையின் ஏற்றத்தாழ்வை நிச்சியிப்பதற்கன்று. ஏனெனிற் காலதேசபேதங்களாற் கவிகள் மனத்தில், தற்செயலாக, அநேக எண்ணங்கள் தோன்றலாம்.

இவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பது மனத்துக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். ஆங்கிலபாஷா நிபுணர்கள் அனேக காலங்க்ளில் இதர தேசத்து நூல்களை ஆராய்ச்சி செய்து ஒற்றுமை நயங்களைக் கண்டு ஆனந்தித்திருக்கின்றார்கள்.

## ஆங்கில நூலராய்ச்சி

ஆங்கில நூலாராய்ச்சியென்பது ஸமீபகாலத்தில் தோற்றியதொரு விசேஷம். ஆங்கிலபாஷாசரித்திரங்களால் அப்பாஷையிற் சிறந்த நூல்கள் கி.பி. 670-ம் ஆண்டு முதலே எழுதப் பெற்று வந்தனவென்று தெரிகின்றது. ஆங்கில நூலாராய்ச்சி 1580-ம் ஆண்டுமுதல் ஆரம்பித்ததாகச் சொல்லலாம். நாடகங்களைக் கண்டித்து காஸ்ஸன் (Gosson) என்பவர் ஒரு புத்தகம் எழுத, நாடகம் அவசியம் என்று லாட்ஜ் (Lodge) என்பவர் விளக்கிக் காட்டினார். பிறகு பழைய நூல்களிலுள்ள சிறப்புக்களை எடுத்துக்காட்டினாலன்றிச் சிறந்த வழி நூல்கள் ஏற்படாவென்று எண்ணி, பட்டன்ஹாம் (Puttenham) (150 - 1700) என்பவரும் வெப் (Webbe) என்பவரும் ஆராய்ச்சி விளக்கம் எழுதினார்கள். அவர்களுக்குப் பிறகு டிரைடன் (Dryden) என்பவர் (1631 - 1700) நூல்களிலுள்ள விஷயங்களை மட்டும் பாராட்டுவதோடு நில்லாமற் காலத்துக்கேற்றபடி இசையும் செய்யுள் வகையும் எவ்வாறு பேதப்பட்டு வந்தனவென்பதையும் ஆராய வேண்டுமென்று வற்புறுத்தினார். பிறகு (Johnson) ஜான்ஸன் (1709 - 1784) என்பவர் குற்றங்கூறலையியல்பாகக் கொண்டு ஆராய்ச்சி செய்தார். இவர்காலத்து ஆராய்ச்சி அத்துணைச் சிறப்புள்ளதன்று. பிறகு (Goldsmith 1728-1774) கோல்ட்ஸ்மித் இயற்கையை உள்ளவாறே கூறுவதுதான் கவிசாதுர்யம் என்று கொண்டாடினார். இவர் (Gray 1716-1771) க்ரே என்ற கவிக்கு உபாயங்களைக் கூறுமிடத்து 'ஜனங்கள் இயற்கையை ஆராய்ந்து உண்மைகளைக் கண்ட வண்ணமே எழுதுக' என்று சொன்னராம். இந்தக்கவி பழைய நூல்களைப் படிப்பதிற்பற்றுள்ளவர்.

பிறகு சில பத்திரிகைகள் தலையெடுத்துத் தமக்கு வேண்டியவர்கள் எழுதிய நூல்களைச் சிலாகித்தும், மற்றவர்கள்

எழுதிய நூல்களைக் கண்டித்தும் உண்மையான ஆராய்ச்சியைச் செய்யாமல் அநேகம் சிறந்தபுலவர்கள் மனம்புழுங்குமாறு செய்தன. இதனால் ஆராய்ச்சி செம்மையாக நடை பெறவில்லையென்று பிற்காலத்திற் சொல்லவந்த ஆராய்ச்சியிற் பேர்பெற்ற (Mathew Arnold) மாத்யூ ஆர்னால்ட் என்பவர் இந்தியர்களின் மன நிலைமையை ஓரிடத்தில் மிகப்பாராட்டி எழுதியிருக்கிறார். காய்தலுவத்தலகற்றிப் பொருள்களை ஆராயுங்குணம் இந்தியர்களிடத்தில் இருக்கின்றதென்றும் அந்த மேன்மையான குணத்தை ஆங்கில ஆராய்ச்சிப் புலவர்கள் கைப்பற்ற வேண்டுமென்றும் இவர் எழுதியிருக்கிறார்.

பிறகு (Coleridge 1772 - 1804) கோல்ரிட்ஜ் என்பவர் நூலாராய்ச்சி முறைகளைச் சீர்ப்படுத்தினார். இவர் செய்யுள் இப்படியிருக்க வேண்டுமென்றும் அதிற்காண வேண்டிய சிறப்புக்கள் இவையென்றும் நிச்சியித்தார். இவர் கருத்து,பெரும்பாலும் 'புவியினுக்கணியாயான்ற பொருடந்து' என்றற்றொடக்கத்து வாக்கியங்களிற் கம்பர் செய்யுளைப் பற்றிப் பொதுவாகக் குறியகருத்தைத் தழுவியுள்ளது.. நவீன நூலாராய்ச்சி, (Carlyle) கார்லைல் என்ற ஆராய்ச்சிப் புலவர் தோன்றிய பிறகே முன்னுக்கு வந்ததென்று சொல்லலாம். நமது ஸொந்த அபிப்பிராயங்களைக் கவிக்கூற்றிற்காண முயற்சி செய்யக் கூடாதென்றும், வெளித்தோற்றத்தை மட்டுங்கண்டு பிரமிக்காது, கவிஞர் கருத்தையும் அவர்கள் எடுத்தாளும் சொற்களையும், அச்சொற்களிலமைந்துள்ள பொருளையும், ஆராய்ச்சி செய்பவர்கள் உய்த்துணர வேண்டுமென்றும் இவர் வற்புறுத்தினார். இவர் கருத்து முழுமையும் இன்னும் அனுஷ்டானத்துக்கு வரவில்லையென்று (Vaughan) வான் என்ற அறிவாளர் தெரிவிக்கிறார். தற்காலத்தில் ராலே (Raleigh) என்பவர் நூலாராய்சசி செய்வதில் மேம்பட்டு விளங்குகிறார்.

இதுவரையில் ஆங்கில நூலாராய்ச்சியின் விருத்தாந்தங்களைக் கவனித்ததில், ஆங்கிலத்தில் நூல்களையாராயும் வகைகள் இவையென்று தெரிந்தன. அவை வருமாறு:- வெளித்தோற்றவாராய்ச்சி: இதிற் சொல், ஓசை முதலியவற்றைக் கவனிக்க வேண்டும். கருத்தாராய்ச்சி: இதிற்

சொல், பொருள், ஓசை முதலியவற்றுள் உள்ள ஒற்றுமை நயம், கருத்தின் மேன்மை, நூற்பயன் முதலியவற்றையாராயவேண்டும்.

அநேகநூல்கள் தோன்றிய பிறகே நூலாராய்ச்சி தலையெடுக்கின்றதென்பதையும், சிலப்பதிகாரத்துக்கு அரும்பதவுரைக்கு முன்னே உரையொன்றிருந்ததையும், சிந்தாமணி முதலிய நூல்களுக்கு நச்சினார்க்கினியரெழுதியுள்ள உரைக்கு முன்னே உரைகளிருந்தனவென்பதையும் உய்த்துணருங்கால், தமிழ் மொழியின் பழமையும் தமிழ்க் கவிஞர்களுடைய ஆராய்ச்சியின் விசேஷமும் செம்மையாக விளங்குகின்றன. கூர்த்த கல்வி கேள்வியுடைய உரையாசிரியர்களாகிய மஹாஉபகாரிகள் எழுதியுதவிய உரை நுட்பங்கள் நமக்கு நிரம்ப இன்பம் பயக்கின்றன.

ஆங்கில பாடசாலைகளில் பாஷையைக் கற்பிக்கும்போது தொகையான பொருளை முன்னே கூறிப் பிறகே பதங்களின் அர்த்தத்தையும் மற்ற விசேஷங்களையும் போதிக்க வேண்டுமென்று இப்போதுதான் வற்புறுத்துக்கிறார்கள். இது புது முறைப்படி பாடம் போதித்தல் எனப் பெயர்பெற்றுள்ளது. சிலப்பதிகாரப் பதிகவுரையில் அடியார்க்குநல்லார் அகத்திணைப் பொருட்பாகுபாடுகளையும் புறத்திணைப் பொருட் பாகுபாடுகளையும் விவரித்தாற் கேட்போர்க்கு இன்பம்பயவாது உணர்வு சலிக்குமாதலின் வந்தன வந்துழிக்காட்டுதலைக்கருதிற்று இவ்வுரை என்று கூறியிருத்தலையும், உரையினது பொதுவிலக்கணங்களைச் கூறுமிடத்து, நன்னூலில் அவ்விலக்கணங்களைப் பாடம், கருத்து, சொல்வகை, சொற்பொருள் முதலாக வகைப் படுத்தியிருத்தலையும் நோக்குங் காலத்தில் மேற்கூறிய நவீன முறையில், தமிழகம் ஸம்பந்தப் பட்டவரையில் நவீனம் ஒன்றும் இல்லையென்பது விளங்கும், உதாரணமாக,

"குணவாயிற்கோட்டத்தரசு துறந்திருந்த
குடக்கோச்சேரலிளங்கோவடிகட்கு"

என்றவிடத்தில் 'இளமைப்பருவத்தே இராஜ போகத்தைத் துறத்தலருமையால் துறந்து என்றும் அங்ஙனம் போகம் நுகர்ந்தவிடத்தே மீட்டும் தலவுருவந்தாங்கியிருத்தலருமையான் இருந்தென்றுங் கூறினார்' என்று உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் சொற்பொருள் விசேஷங்களைப் பாராட்டியெழுதிய உரைநயம் வியக்கத்தக்கது.

இனி ஆங்கிலத்தில் இயல் இசை நாடகநூல்களை ஆராய்ச்சி செய்யும் முறைகளைச் சுருக்கமாக எடுத்துச் சொல்லும் க்ராஷா (Crashaw) என்பவர் நாடக இலக்கண உறுப்புக்களைப் பற்றி எழுதியிருப்பதையும், அடியார்க்குநல்லார் "இனிப் பொருளாராய்ச்சி எண்வகைய. அவை திணை, பால், செய்யுள், நிலம், காலம், வழு, வழக்கு, இடம் என்ப. திணை 2; பால் 14; செய்யுள் 6; நிலம் 4; காலம் 12; வழு 14; வழக்கு 2; இடம் 2;' என்று பொருளாராய்ச்சியை வகைப்படுத்திக் கூறியிருத்தலையும், சீர்தூக்கிப் பார்க்குமிடத்துத் தமிழுரை ஆசிரியர்களின் ஆராய்ச்சியின் விசேஷம் நன்குவிளங்கும்.

## பிரதிகள் ஆராய்ச்சி

பழையபிரதிகள் சாஸனங்கள் முதலியவற்றை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்துப் பதிப்பித்தல் மிக்க சிரமஸாத்தியமானது. இவற்றைச் செம்மையாக ஆராய்ச்சிசெய்பவர்களே தேசசரித்திரத்தை நன்கு உணர்வார்கள். தேசசரித்திரஸம் பந்தமான ஆராய்ச்சியில், பாஷை நடையைவிட விஷயங்களின் உண்மையையே மிக கவனமாக ஆராயவேண்டும். பழைய பிரதிகளையாராய்வதிலேயே தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் செலவழித்து வரும் பெரியோர்களே இவ்வித ஆராய்ச்சியின் நுட்பங்களை எடுத்துக் கூறத்தக்கவர்கள்.

பிரஞ்சு பாஷையில் இவ்வித ஆராய்ச்சியைப் பற்றி லாங்கிளாயிஸீனாபாயி (Longlois Seignobois) என்ற புலவர்கள் விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்கள். அவர்களின் அபிப்பிராயங்களை முறையே வாசித்தல், ஆராய்தல், தெளிதல் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

## வாசித்தல்

ஒரு பிரதியைப் பார்த்து எழுதுவதில் அநேகம் பிழைகள் நேர்ந்திருக்கலாம். மூலப்பிரதியே ஒப்பிடுவதற்குக் கிடைக்காமலிருக்கலாம். சில விஷயங்களை ஊகித்தே அறிய வேண்டியிருக்கும், ஒரே தவறு அநேகம் பிரதிகளிற் காணப்பட்டால், அதனைச் செம்மையாகப் பரிசோதிக்க வேண்டும். நூலாசிரியர் இன்னாரென்பதை நியாயங்களைக் கொண்டு நிச்சயிக்க வேண்டும்.

## ஆராய்தல்

நூலைச் செம்மையாக ஆராய்ச்சி செய்த பிறகே அதன் உண்மையான வடிவம் புலப்படும். குறிப்புக்களை தொடர்ச்சியாக எழுதிக் கொண்டே வருவதைவிடத் தனித்தனி காகிதங்களில் எழுதிவருவது சிறந்தமுறை. ஆராய்ச்சி செய்பவர்களிடத்திற் சில குணசேஷங்கள் இயல்பாகவே அமைந்திருக்க வேண்டும். (1) எடுத்துக் கொண்ட முயற்சியில் அதிகப் பிரியமிருக்க வேண்டும். (2) நெடு நாட்களாகத் தெரியாத உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் ஊக்கமும், அவற்றைத் தெரிந்து கொள்வதில் ஸந்தோஷமும் இருக்க வேண்டும். தமக்குத் தோற்றியவாறெல்லாம் பதிப்பிக்காமற் கண்ட வண்ணமே பதிப்பிக்க வேண்டும். (Froude) பிரவுட்டென்ற ஆங்கில வித்வான் அவஸரப்பட்டு ஆராய்ந்து, கண்டது ஒன்றிருக்க வேறொன்றை எழுதி விடுவாராம். இவ்வாறு யோசியாமற் பதிப்பதைப் பிரவிட்வியாதி (Froude's Disease) என்று சொல்லுவார்கள். ஆராய்ச்சி செய்பவர்கள் இவ்வியாதி தம்மையணுகா வண்ணம் தடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

## தெளிதல்

ஆசிரியர் மனத்தில் என்ன கருத்து இருந்திருக்கலாம் என்பதை அவர் எழுதியதிலிருந்தே ஊகிக்க வேண்டும். இவ்வாறு ஆராய்ச்சி செய்ய ஒருவருக்கு நிறைந்த பாஷாஞானம் இன்றியமையாதது. ஸாதாரணமாகப் பாஷையிற் பழக்க மட்டுமிருந்தால் அது போதாது. சிலகாலங்களிற் சில பதங்களுக்குச் சிறப்பாகச் சில அர்த்தங்களிருக்கலாம். அவற்றைத் தெரிந்து கொண்டு இடத்துக்கேற்றவாறு வாக்கியங்களின் பொருளைத் தெளிந்து கொள்ள வேண்டும். மனத்தாலாராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டிய அரியவுண்மைகளைக் கவிகள் கதைகள் மூலமாக ஸுலபமாகத் தெரிவித்திருக்கலாம். இவற்றிற் கவியின் கருத்தை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். யாதொரு ஆதாரமுமின்றி கர்ண பரம்பரையாக அநேக விஷயங்கள் வழங்கி வரலாம். இவற்றின் உண்மையை நிச்சயித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தமிழ்க் கவிகளைப் பற்றி அநேகஞ் செய்யுட்கள் கர்ண பரம்பரையாகவே வழங்கி வருகின்றன. அவற்றைக் கற்றறிந்த பெரியோர்களே சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் உண்மையை நிச்சயிக்க வல்லவர்கள்.

மேற்கூறிய ஆராய்ச்சி முறைகளுக்கு இலக்கியங்களாகப் புறநானூறு முதலிய சங்கநூற் பதிப்புக்களைச் சொல்லலாம். லாங்கிளாயிஸீனாபாயி இயற்றியுளகிரந்தத்திற் கூறப்பட்ட முறைகளையெல்லாம் இப்பதிப்புக்களிற் காணலாம் விரிவஞ்சி ஒவ்வொன்றுக்கும் உதாரணங்கொடுக்காமற் சில முக்கிய அம்சங்களை மட்டும் இங்கு எடுத்துக் கொண்டேன்.

(1) புறநானூற்றுச் செய்யுட்களிற் பிரதிகளிற் சொற்கள் சிதைந்தவிடங்களைக் காட்ட ஒற்றைப் புள்ளி நிரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

(2) புறநானூற்றிலிருந்து, வேறுநூல்களினுடைய பழைய உரைகளின் இடையிடையே உரையாசிரியர்களாற் பூர்த்தியாகவும் சிறிது சிறிதாகவும் எடுத்துக்காட்டப் பெற்ற செய்யுட்கள் மூலமாகச் சில குறைந்தபாகங்கள் நிரப்பட்டுள்ளன.

(3) சிந்தாமணி முகவுரையில், திருச்சிற்றம்பலம் பெரும்பற்றப்புலியூர் என்பவற்றை முறையே ஆறெழுத்தொரு மொழிக்கும் ஏழெழுத்தொரு மொழிக்கும் உதாரணமாக் காட்டியதிலிருந்து ஆசிரியர் நச்சினார்க்கினியர் மத்தலை நிச்சயிப்பது ஓர் ஆராய்ச்சி விசேஷம்.

(4) சிலப்பதிகாரத்தில் இக்காலத்து வழங்கப் பெறாத சில இயற்றமிழ்ச் சொற்கள் விளங்காதிருப்பன, மற்ற நூல்களாலும் பழயைவுரைகளாலுமே ஆராய்ச்சி செய்ய விளங்கக் கூடுமென்று துணிதல் மேலே காட்டிய ஆராய்ச்சி முறையில் அடங்கும்.

(5) திருப்பெருந்துறை மிழலைக் கூற்றத்திலுள்ளது. மிழலைக் கூற்றம் "நெல்லரியுமிருந்தொழுவர்" என்ற புறநானூற்றுச் செய்யுளால் நெய்தனிலத்தைச் சார்ந்ததென்று தெரிகின்றது. ஆதலால், திருப்பெருந்துறை கடற்கரையிலுள்ள தோரூர். திருவாதவூரர் உபதேசம் பெற்றஸ்தலம் இதுவேயெனத் திரிசிரபுரம்வித்துவான் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையவர்கள் ஆற்றிய திருப்பெருந்துறைப் புராண முகவுரையிற்குறித்திருப்பது சரித்திரசாஸன ஆராய்ச்சி வகையிற் சேரும்.

(6) அநேக நூல்களை ஆராய்ந்து கருத்துகளைப் புலவர்கள் எப்படித் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையறிந்து படிப்போர்களிக்கும்படி சிந்தாமணியின் இரண்டாம் பதிப்பிற் சேர்க்கப் பெற்றுள்ள ஆராய்ச்சி விளக்கம் 'ஒற்றுமைநயத்தைக்காணும்' ஆராய்ச்சிவகையிற் சேரும்.

இன்னும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நூலாராய்ச்சியைக் குறித்துச் சொல்லக் கூடிய விஷயங்கள் எவ்வளவோவுள்ளன. நூலாராய்ச்சியே இன்பத்துளின்பமெனக்கொண்டுவாழுர் அறிவாளர்களே இதைப் பற்றி மிகவிமரிசையாகச் சொல்லக் கூடும். இதனை நான் விவகரிக்கப்புக்கது. 'ஆசை பற்றியறையலுற்றதாகக் கொண்டு' இதிற்காணும் வழுக்களை அறிவாளக் பொறுத்தருளுமாறுவேண்டுகின்றேன். நூலாராய்ச்சியாற் பாஷையின் விரிவும், பாஷையிற் சொற்களின் பயனும், எல்லா விஷயங்களைப் பற்றியுஞ் சொல்லப் பொருள் நிரம்பிய சொற்கள் பாஷையில் உண்டென்னுமுண்மையும் தேசத்துச் சரித்திரமும், நாகரிகமும், மற்றுமறிய வேண்டிய அநேக உண்மைகளும் தெரியும். முன்னோர் ஆராய்ச்சி செய்த முறையையே நாமுங்கைப் பற்றி நூல்களை ஊன்றிப் படித்தோமானால் அநேகஞ் சிறந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

நூல்களின் நுட்பங்களைச் செம்மையாக அறிவதற்கு அனுகூலமாக உரையெழுதியருளிய உரையாசிரியர்களுக்கும், அவ்வுரைகளையும் மூலப்பிரதிகளையும் தெளிவுபெற ஆராய்ந்து அரிதிற்பதிப்பித்துதவும் அறிவாளராகிய மஹாவுரபகாரிகளுக்கும், தமிழ்ப் பாஷாபிவிருத்தியில் விசேஷ அபிமானமுள்ளவர்களாகிய ஸேதுபதியவர்களுக்கும் தமிழகம் செய்யக் கூடிய கைமாறு யாதுளது?

'கைமாறுவேண்டாக்கடப்பாடுமாரிமாட்
டென்னாற்றுங்கொல்லோவுலகு'

# சுவடிப்பதிப்பாய்வில் ஆமையர் அம்மானை

- மொ. மருதமுத்து

***முன்னுரை:***

உலக மொழிகள் பலவற்றிலும் தொன்மையுடையது தமிழ் மொழி. இம்மொழியானது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே ஒரு நீண்ட இலக்கிய வரலாற்றைப் பெற்று விளங்கியது என்பது உலக அறிஞர்கள் அனைவரும் ஒத்துக் கொண்ட செய்தியாகும். இத்தகைய மொழியின் நூல்கள் அனைத்தும் பண்டைக் காலத்தல் ஓலைச் சுவடிகளாகவே வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. அண்மைக் காலம் வரை நம் முன்னோர்கள் ஓலைகளில் எழுதி வந்திருக்கிறார்கள். இந்த ஓலைச் சுவடிகளைப் பதிப்பித்து வெளியிட வேண்டுமென்பதில் மிகுந்த நாட்டமுடன் விளங்கும் நிறுவனம் சென்னை ஆசியவியல் நிறுவனமாகும். இந்நிறுவனம் ஓலைச் சுவடிகளையும், பழந்தமிழ் நூல்களையும் திரட்டிப் பாதுக்காக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டிருக்கிறது. இவ்வாறு பாதுக்காக்கப் பெற்றவற்றுள் ஒன்றே ஆமையர் அம்மானை என்பது.

***சுவடி பற்றிய செய்திகள்***

ஆமையர் அம்மானை என்னும் இச்சுவடி நூல் நாட்டுப்புற இலக்கியத்தில் 'அம்மானை' என்னும் கதைப்பாடல் வகையினைச் சார்ந்தது. இச்சுவடியை கன்னியாகுமரி மாவட்டம், அகத்தீசுவரம் கு.ஆறுமுகப்பெருமாள் நாடாரின் குடும்பத்தார் இந்நிறுவனத்திற்கு 7.10.1985 அன்று வழங்கியுள்ளனர்.

ஆமையர் அம்மானைச் சுவடி எளிய பனையோலையில் எழுதப் பெற்றுள்ளது. இச்சுவடி 61 ஏடுகளுடன் 46.5 செ.மீ நீளமும் 4 செ.மீ அகலமும் உடையதாகக் காணப்படுகிறது. சுவடியின் முன்னுள்ள வெற்றோலையை அடுத்து நூல் தொடங்குகிறது. சுவடியில் ஓலையின் இருபக்கமும் எழுதப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பக்கமும் மூன்று பத்திகளாகப்

பிரிக்கப்பெற்று ஒரு பத்திக்குப் பத்து வரிகள் எழுதப்பட்டுள்ளன. ஏட்டின் பக்க எண்களைத் தவிர, அடிகளின் எண்களோ பாடல்களின் எண்களோ ஏதுமில்லை. இதன் அடிகள் பாடல் வரையறை செய்துகொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. உள்தலைப்புகள் ஏதுமில்லை. மிகப் பிற்காலத்தில் படிஎடுக்கப்பட்ட சுவடியாதலால் மெய்யெழுத்துக்கள் எல்லாம் புள்ளியிடப் பெற்றுத் தெளிவான முறையில் எழுதப்பெற்றுள்ளன.

## பாட்டமைப்பு

ஆமையர் அம்மானை நூலில் காப்புப் பாடல்களைச் சேர்த்து 3745 அடிகள் காணப்படுகின்றன. இது வெண்கலிப்பா வால் ஆயது எனினும், இடையிடையே ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், சந்த விருத்தம் முதலிய யாப்பு வகைகளும் வந்துள்ளன. இந்நூலினுள் 42 ஆசிரிய விருத்தங்களும், 5 கலி விருத்தங்களும், 3 சந்த விருத்தங்களும் உள்ளன. திருவாசகம் என்ற தலைப்பில் அடங்கிய 20 விருத்தங்களும், வெண்கலிப்பா யாப்பில் 44 அடிவரையறையற்ற நீண்ட பாடல்களும் (இது நடை (அ) வேறு என்று ஆசிரியரால் குறிக்கப்படுகிறது) ஆக 114 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்நூல் தொடர்ச்சியாகக் கதையைக் கூறிச் செல்லும் போக்கினையுடையது.

'அம்மானை' என்ற சொல், நூலின் பலவிடங்களில் வருகின்றதாயினும், ஆசிரியர் தமக்குத் தோன்றிய இடங்களில் எல்லாம் அம்மானை என்ற சொல்லை யாப்பின் பொருட்டாக அமைத்திருப்பதாகத் தோன்றுகின்றதேயொழிய, உட்குறிப்பு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

## பதிப்புமுறை:

சுவடிச்செய்யுளின் மூலவடிவத்தை விருப்பப்படி மாற்றுவதற்கு எந்த உரிமையும் பதிப்பாசிரியர்க்கு இல்லை என்றாலும், சுவடியில் படியெடுப்போரால் ஏற்பட்ட எழுத்துப் பிழைகளை நீக்க வேண்டிய கடமை பதிப்பாசிரியரைச் சார்ந்தது ஏட்டில் உள்ள பிழைகளோடு அதைப் பதிப்பித்து வெளியிடுவோமானால், மூல நூலாசிரியரே பிழையாகத் தான்

எழுதியுள்ளார் என்ற தவறான எண்ணம் கற்றோர் மத்தியில் எற்பட்டுவிடும். எனவே, ஏட்டில் உள்ளதை உள்ளவாறு பதிப்பிக்க முனைவதைவிட, தவறுகளைத் திருத்திப் பதிப்பிக்கும் போதே அப்பதிப்பு சிறப்புடையதாக அமையும். அப்போதுதான் நூலாசிரியருக்கும் அது பெருமையைத் தேடித் தருவதாக இருக்க முடியும். ஆகவே இவ்வடிப்படையில் இந்நூற்பதிப்பு மேற்கொள்ளப்பட்டது.

காட்டாக, முன்பில் வழக்குரைத்தான் (590), ஆரபாரத்துடனே (637), தறைதனிலே (681), பொற்சருகை (2136) என்னும் சொற்களில் உள்ள எழுத்துப்பிழைகள் முறையே முன்பின் வழக்குரைத்தான், ஆரவாரத்துடனே, தரைதனிலே, பொற்சரிகை என்பனவாகத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இப்படித் திருத்தம் பெற்ற சொற்கள் சுவடியில் எவ்வாறு இருந்தன என்பதை 'சுவடிச்சொல்' என்று குறிப்பிடப்பட்டு அவ்வப்பக்கத்திலேயே அடிக்குறிப்பில் சுட்டப்பட்டுள்ளன.

பதிப்பில் பாடவேறுபாடுகள் பல சுட்டப்பெற்றுள்ளன. அவை நூற்செய்யுளில் அவ்வப்பக்கத்திலேயே அடிக்குறிப்பில் இடம் பெறுகின்றன. பாடவேறுபாட்டினைக் காணும்போது சிறந்த, உண்மையான பாடத்தைப் பதிப்பித்து, அல்லாததை அடிக்குறிப்பில் தருவது வழக்கம். அதுவே தூய பதிப்பாகக் கொள்ளப் பெறும். அம்முறையில் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

நூலின் கதையோட்டத்திற்கு ஏற்பப் படிப்பவர் புரிந்து கொள்ளும் வகையில் கதைத்திருப்பங்களும் வருணனைகளும் வருமிடங்களில் இடையிடையே பதிப்பாசிரியரால் தலைப்புகள் தரப்பட்டுள்ளன.

## நூலின் பெயர்க்காரணம்

நூலுக்குப் பெயரிடும் முறையை உரைக்குமிடத்து பவணந்தியார்,

> "முதனூல் கருத்தன் அளவு மிகுதி
> பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
> இடுகுறி யானும்நூற் கெய்தும் பெயரே"

என இக்காரணங்களால் பெயர்பெறும் என்பார். நூலில் வரப்பெறும் தலைவன், தலைவியர் சிறப்புக் கருதியும் அவர்களின் பெயர்களால் நூல் பெயர் பெறுவதுமுண்டு. அவ்வகையில் இந்நூல் கதைத் தலைவனின் சிறப்பாலும் அம்மானை என்ற நாட்டுப்புறக் கதைப்பாடல் அமைப்பில் பாடப் பெற்றுள்ளதாலும் ஆமையர் அம்மானை என்று பெயர் பெறுவதாயிற்று.

நாகமுனிமைந்தன் என்பவன் இறைவனது சாபத்தால் மறுபிறவியில் ஆமையராகப் பிறந்து, வளர்ந்து, பல்வேறு தீரச்செயல்களால் பெண் நால்வரை மணந்து, நாட்டிற்கரசனாகி, இறுதியில் இறைவனருளால் முத்தி பெறுகின்றனன் எனும் நிலையில் கதை முழுவதும் அவன் சிறப்பே கூறப்பெறுவதால் ஆமையர் அம்மானை என்று இந்நூல் பெயர் பெறுகிறது.

## நூல் தோன்றக் காரணம்

நாகரிகம் மாநிலத்திற்கு மாநிலம், மொழிக்கு மொழி, இனத்துக்கு இனம், காலத்துக்குக் காலம் மாறுபடுகிறன்து. இம்மாறுபாட்டிற்கேற்ப அச்சமூகத்தில் அவ்வப்போது எழுந்த நாட்டுப்புறக் கதைகளும், பழங்காலத்து நம்பிக்கைகளுடன் புதிய காலத்துப் பரிமாணங்களையும் கொண்டு படைக்கப் பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

குமரி மாவட்ட நாட்டுப்புற மக்களால் ஆமையராசன் கதை, கூந்தப்பிள்ளை கதை, சின்னான் கதை, செம்புலிங்கம் கதை, பொன்னிறத்தாள் கதை, மருதநாயகம் பிள்ளை கதை போன்ற கதைகள் இன்றும் வழங்கப்பெற்று வருகின்றன. இவையல்லாமல் பஞ்சதந்திரக்கதை, தெனாலிராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை, மதனகாமராசன் கதை, புராண மற்றும் இதிகாசங்களைத் தழுவிய கதைகள் ஆகியனவும் காலங் காலமாகத் தமிழக நாட்டுப்புற மக்களால் வழங்கப்பெற்று வருவனவாகும். இவை பெரும்பாலும் மக்களின் பேச்சு மொழியில் அமைந்தவை. இவை ஒரு காலத்தில் வாய் மொழியாக வழங்கி வந்த பிறகு நாட்டுப்புறப் புலவர்களின் குறை நிறைகளோடு எழுத்து வடிவம் பெற்று வழங்கிவரலாயின.

குமரி மாவட்டத்தில் வழங்கப்பட்டு வரும் ஆமையராசன் கதையானது, மதனகாமராசன் கதையில் வருகின்ற 'ஆமையாயிருந்த இராசகுமாரன் தேவகன்னியினது அருளால் மந்திரி குமாரத்தியை விவாகஞ் செய்த கதை' என்ற கதையின் கருவிலிருந்து சிற்சில மாற்றங்களுடன் உருவாக்கம் பெற்றுள்ளது. இக்கதையுடன் ஆமையர் அம்மானையின் நூலாசிரியர் 'அபிமன்னன் சுந்தரிமாலை' என்னும் புராணக் கதைப்பாடலின் தொடக்கப்பகுதியான 'கதையின் வரலாறு' என்ற பகுதியின் கருத்தையும் இணைத்து மக்களுக்கு வாக்கின் வலிமையை உணர்த்தும் வகையிலும், இறைநம்பிக்கையை வலியுறுத்தும் வகையிலும் இவ்வம்மானைக் கதைப்பாடலை அமைத்துள்ளார்.

பொதுவாக விழாக்காலங்களில் மக்களின் பொழுது போக்கிற்காகக் கதைப்பாடலை வில்லுப்பாட்டில் பாடுவர். இவ்வாறு பாடப்பெறும் கதைப்பாடலில் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்கள், பக்தி உணர்வு, நாட்டு உணர்வு போன்ற கருத்துக்கள் இடம் பெற்றிருக்கும். நாட்டுப்புறங்களில் நடக்கும் உண்மைக்குப் புறம்பான நிகழ்ச்சிகள், புராண நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் கொண்டு கதைப்பாடல்களை வடிவமைப்பர். இந்நூலாசிரியர் இவற்றினை மனத்திற்கொண்டு இறையுணர்வுக் கதையோடு கூறுமிடத்து மக்கள் அதை எளிதில் ஏற்பர் எனக் கருதி இறைப் பாத்திரங்களையும், கதையூடே நடமாட விட்டுள்ளார். இப்படிக் கையாண்டுள்ள இந்த உத்தியே கதைப் போக்கிற்கு மேலும் சிறப்பூட்டுவதாக உள்ளது. எனவே, மக்கள் மனத்தில் இறைப்பற்றை உணர்த்தவும், நன்மை தீமைகளை எடுத்தியம்பவும் இவ்வம்மானை நூல் உருப்பெற்றமை புலனாகிறது.

## நூலாசிரியர்

நூலின் பெருமை உணர நூலாசிரியர் வரலாறு இன்றியமையாததாகின்றது. நூலாசிரியர் வரலாற்றை அறிய அக, புறச்சான்றுகள் பெரிதும் துணைபுரிகின்றன. அவ்வகையில் இந்நூலின் அகச்சான்றின் வழி இந்நூலாசிரியர் வரலாற்றை அறிய முடிகின்றது. நூலின் அவையடக்கத்தில்,

"மாதுற்ற செந்தாமரை மலர்போல் முகத்தழகன்
தாதுற்ற மால்பூதத் தான்பெருமாள் ஈன்றசெல்வன்
நாறுமலர் சூழுலகில் நற்றமிழோர் தன்னருளால்
ஆறுமுகம் நல்லதமிழ் அம்மானை கூறலுற்றேன்"[3]

என்றும்,

"பொன்காத்தான் சொன்னகதைப் பொருளிதுகா
ணம்மானை
அக்கதைகேட் டாறுமுகம் அம்மானை செப்புகிறேன்"[4]

என்றும் கூறுவதிலிருந்தும் இந்நூலாசிரியர், 'பூதத்தான் பெருமாள்' என்பாரின் மகன் 'ஆறுமுகம்' என அறியமுடிகின்றது.

இவ்வாசிரியர் தென்பாண்டி நாட்டிலுள்ள குமரி மாவட்டத்தில் அகத்தீசுவரம் என்னும் ஊரைச் சார்ந்தவவர்; சிறந்த செந்தமிழ்ப்புலமை பெற்றவர், வில்லுப்பாட்டுக் கதை பாடுவதில் வல்லவர் என்னும் செய்திகள் தெரியவருகின்றன. இவர் பொன்னுலகர் கதை என்னும் உலகுடையார் கதையையும் பாடியிருக்கிறார் என்பதை அந்நூலின் கீழ்வரும் அடிகள் உணர்த்துகின்றன.

"பார்சிறக்கும் பூதத்தான் பெருமாள் அருள்பாலன்
பாவலர்கள் தன்னருளால் ஆறுமுகம் சொன்னான்"[6]

என்னும் அடிகள் ஆசிரியரால் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆசிரியர் இதில் தன் தகப்பனார் பெயர் பூதத்தான் பெருமாள் எனக் கூறுவதிலிருந்து ஆமையர் அம்மானை நூலின் ஆசிரியரான ஆறுமுகமே இவர் என்பது தெற்றெனத் தெரிகின்றது.

### காலம்

நூலின் காலத்தை முழுமையாக அறிய உதவுவது கால ஆராய்ச்சி. இஃது இலக்கிய வரலாற்றை முறைப்படுத்திக் காணவும், மொழி வரலாற்றாய்விற்கும் துணைபுரிகின்றது. எனவே, நூலின் காலத்தை அறிவது மிகவும் இன்றியமையாததாகின்றது.

ஆமையர் அம்மானை நூலின் ஆசிரியர் அந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடல் அடிகளின் வழி காலத்தை வரையறுக்க முடிகின்றது.

"நீண்டபுகழ் தான்வளரும் நீணிலத்தில் இக்கதையை
ஆண்டுதொள் ளாயிரத்து ஐம்பத்தொன் றாவதுவருடம்
விருச்சிக மாதமதில் மிக்கவொன்ப தாம்தியதி
நன்றாம் சோமவாரம் நற்சோதி நாளதிலே
ஏடாக இக்கதையை எழுதிவைத்தேன் அம்மானை"[7]

எனவரும் இப்பாடலில் கொல்லம் ஆண்டு 951ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒன்பதாம் நாள் திங்கட்கிழமை குறிக்கப்படுகிறது. எனவே இவ்வாண்டுடன் கொல்லம் ஆண்டின் தொடக்கமான கி.பி.824ஐக் கூட்டினால் (951-824) கி.பி. 1775 கிடைக்கிறது. எனவே., கி.பி. 1775இல் நூல் எழுதப்பெற்றுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

## நூலில் காணப்பெறும் நயங்கள்

ஆமையர் அம்மானை நூலானது அம்மானைக் கதைப்பாடலின் நூலமைப்பு முறையைப் பெற்றிலங்குவதோடு மட்டுமன்றி, அணி நயம், பாநயம், சொல்நயம், பொருள் நயம் போன்ற நயங்கள் பலவற்றையும் பெற்றிலங்குகிறது. அணிநயத்தில் உவமை, உருவகம், தன்மை நவிற்சி அணி, அதிசய அணி ஆகிய அணிகள் பயின்று வந்துள்ளன. இயற்கை கடந்த நிகழ்வுகள், நம்பிக்கை, விதி, சடங்குகள் போன்ற சமுதாய வழக்க முறைகள்.

பழங்கதை, புராணக் குறிப்புகள் போன்ற செய்திகளும் பேசப்படுகின்றன.

## கதைப்பாத்திரம் பெயர்வைப்பு முறை

இந்நூலாசிரியர் கதைப் பாத்திரங்களின் பெயர்களைக் கற்பனையாக வைத்திருந்தாலும் கதை நிகழ்ச்சியின் செயலுக்கேற்பப் பொருத்தமாக அமைத்திருப்பது சிறப்பிற்குரியதாக அமைகிறது.

ஆமையர் அம்மானையின் கதைத்தலைவன் ஆமை உருவில் பிறந்ததின் காரணமாக 'ஆமையர்' எனவும், ஆமையர் முற்பிறப்பில் பூவின் (மலரின்) வாசனையை முகர்ந்ததினால் இப்பிறப்பின் முடிவில், 'பூவாசநாதன்' எனவும், பூவாருடையாள் பூவிற்குத் தாயாக இருப்பதினால் 'பூவாருடையாள்' எனவும், பூரணவல்லி பூவாகப்பிறந்ததினால்' பூரணவல்லி, எனவும், நாகமணிமாலை நாகம் தீண்டி இறந்ததால் 'நாகமணிமாலை; எனவும், சம்மந்தராசன் சம்மந்தமாநகரின் அரசனாதலால் 'சம்மந்தராசன்' எனவும், சம்மந்தமாலை சம்மந்தராசனின் மகளாதலால் 'சம்மந்த மாலை' எனவும், சச்சகிரிமாலை ஈனகிரிமலையைச் சேர்ந்தவளாதலால் 'சச்சகிரிமாலை' எனவும் கதை நிகழ்வின் செயலுக்கேற்பக் கதைப் பாத்திரங்களின் பெயர்களை அமைத்துள்ளார் ஆசிரியர்

## முடிவுரை:

இந்நூல் சுவடிப்பதிப்பாக வருவதாயிற்று என்றாலும், மூலம் மட்டில் பதிப்பிக்காது ஆய்வு முன்னுரையுடன் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. மூலத்தில் உள்ளது உள்ளவாறு பதிப்பித்தலே சிறப்பு என்பது முன்னோர் கூற்று எனினும், மூலநூலானது ஒன்று மட்டுமே மூல ஆசிரியரின் கைப்பட எழுதுவது; மற்றச் சுவடிகள் எல்லாம் பிறரால் பிரதி செய்யப்படுபவையாதலால் பிழைகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்து விடுகிறது. எனவேச் சுவடியில் உள்ளது உள்ளவாறே பதிப்பித்தல் என்பது பிழைகளுடன் கூடிய பொருள் விளங்காத நூலையே உருவாக்க வழிவகுக்கும். அந்நிலையினின்று விடுபட்டுப் பிழை உள்ளவிடத்து கற்போர் உளமேற்கும் வகையில் தேவையான திருத்தம் செய்து நூலின் பொருள் விளங்குமாறு இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

## பயன்பட்ட நூல்கள்


(அ). முதன்மைச் சுவடிகள்

1) ஆமையர் அம்மானை எண்.5 ஆசியவியல் நிறுவனம் சென்னை 600 119.

2) பூவாசநாதன் எனும் எண். 183 " " " " ஆமையர் அம்மானை

3) பொன்னுலகர் கதை எண். 14 " " " "

(ஆ) நூல்கள்

4) சுப்பிரமணியம், பூ. சுவடியியல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1991

5) பவணந்தியார், நன்னூல் மூலம், கழக வெளியீடு, சென்னை, 1983.

மருதமுத்து,மொ., புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.

---

1. ஆமையர் அம்மானை, மொ. மருதமுத்து (பதி, ஆசியவியல் நிறுவனம், சென்னை, 1996.

2. நன்நூல், நூற்பா. 49.

3. ஆமையர் அம்மானை, அடிஎண் - (71-74)

4. ஆமையர் அம்மானை, அடிஎண் - (114, 115)

5. இக்கதைப்பாடலானது ஆசியவியல் நிறுவனத்தில் சுவடிநூலகப் பார்வை எண். 4இல் சுவடி வடிவில் உள்ளது.

6. பொன்னுலகர் கதை, அடி எண் (99, 100)

7. ஆமையர் அம்மானை, அடிஎண் (91-102)

# சிந்தனைக்குச் சில குறட்பாக்கள்

- நாபா

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இனி மற்றொரு குறட்பா பல அறிஞரின் ஆராய்ச்சிக்கும் அகப்படாமல் இன்றளவும் புதிராகவே உள்ளது. அது,

"மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

என்பது. இங்குக் கவனிக்கத்தக்க சொல் பார்ப்பான் என்பதாம். இக்குறளுக்குப் பரிமேலவகர்,

"கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ்வருணம் கெடாமையில் பின்னும் அஃது ஓதிக்கொளலாம்; அந்த ணனது உயர்ந்த வருணம் தன் ஒழுக்கம் குன்றக்கெடும்"

என்று பொருள்கண்டு, மேலும் விளக்குவாராய், "மறந்தவழி இழிகுலத்தனாம் ஆதலின், மறக்கலாகாது என்னும் கருத்தான் மறப்பினும் என்றார். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின், இஃது ஏனைய வருணகட்கும் கொள்ளப்படும்" என்றார்.

மணக்குடவர், "பிராமணன் வேதத்திணை ஓதி மறந்தானாயினும், பின்னும் ஓதிக்கொள்ளலாம்; ஒழுக்கம் குறையுமாயின் குலம் கெடும் என்றவாறு" என்பர். பரிதியாரும் இப்பொருள்படவே உரைத்துள்ளார். இனிக் காளிங்கரும், "தனது குலமரபுக்கு முதற்காரணமாகிய தானோதிய வேதத்தை மறந்தானாயினும் பின்னும் அஃது ஓதிக்கொளலாயிருக்கும்; மற்று அந்தணனது குலப்பண்பு தனது ஆசாரம் குறைபடவே கெடும் என்றவாறு" என்று பொருளுரைத்தார். இப்பழைய உரைகார் அனைவரும்.

1) ஓத்து என்பது வேதம் - எனவும்
2) பார்ப்பான் என்பது வேதம் ஓதும் பிராமணன் - எனவும்
3) ஒழுக்கம் குன்றின் அவனது உயர்வருணம் கெடும் - எனவும்

வருணாசிரமத்தை மனங்கொண்டு குறுகிய நிலையில் உரை கண்டுள்ளனர். இவ்வாறு உரைப்பது திருவள்ளுவரின் உள்ளத்திற்கு உகர்ந்ததா? திருக்குறள் வருணாசிரமக் கோட்பாட்டை ஒப்புக்கொள்கிறதா? நூலுள் வேறு எங்கேனும்

பார்ப்பான் என்ற சொல்லைத் திருவள்ளுவர் வேதியர் அல்லது பிராமணர் (அந்தணர்) என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளரா? இவை போன்ற கேள்விகளுக்கு விடை காணல் வேண்டும். இவ்வுரைகாரர் எல்லோரும் "பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம்" என்று கொண்டு பொருள் கண்டுள்ளனர். அவ்வாறாயின் பார்ப்பானது ஒழுக்கம் குன்றினால்தான் கேடு வருமோ? பிறரது ஒழுக்கம் குன்றின் என்னாம்? அன்றியும் 'பிறப்பு' என்பதற்கு இவரெல்லாம் 'குலம்' அல்லது 'வருணம்' என்றே பொருளுரைத்துள்ளனர் என்பதும் நோக்கத்தகும். இக்குறளின் தொடர்களை இவ்வாறு சேர்க்காமல்,

1) பார்ப்பான் மறப்பினும் ஒத்துக்கொளாலாகும் - என்றும்
2) பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் - என்றும்

இக்குறட்பாவின் சொற்றொடர்களைக் கொண்டு கூட்டவேண்டும். இங்ஙனம் கொள்ளும்போது பார்ப்பான் யாவன்? ஒத்து என்பது யாது? எனக் காண்டல் வேண்டும். ஒத்து என்பது வேதமாகிய வடவர் நூலினைத்தான் குறிக்கும் எனக் கொள்ளலாகாது. திருவள்ளுவருக்கு அது கருத்தாயின் 'வேள்வி' போன்ற சொற்களைப் பயன்படுத்திய அவர் 'வேதம்' என்பதனையும் பயன்படுத்தியிருப்பார். சங்கத் தொகைநூல்களில் 'வேதம்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. "நால்வேதம் நெறிதிரியினும்" என்பது புறநானூற்றடி. ஓத்து என்பது ஓதப்படுவது என்று பொருள்பட்டு தொடர்ந்து ஓதப்படும் அறநூலுக்குக் குறியீடாயிற்று எனக் கொள்ளல் வேண்டும். பண்டைத் தமிழகத்தில் மக்களுக்கு அறிவு கொளுத்தவும் அறம் உணர்த்தவும் ஆன்றோர் சிலர் வாழ்ந்து வந்தனர். இன்றும் அத்தகைய சான்றோரைச் சமுதாயத்தில் மதித்துப் போற்றுகின்றனர். உயர்ந்த சமயநூல்களையும் சாத்திரங்களையும் ஓதுவதனையும் பிறர்க்கு உணர்த்துவதனையும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு வாழும் பெரியோர் அல்லது அறிவர் சிலர் எக்காலத்தும் உளராவர். இவர்கள் பொதுவாக ஒழுக்கமும் ஞானமும் கைவரப் பெற்ற முத்தராவார்கள். பார்ப்பான் என்பது இத்தகைய அறநூல்களைப் பார்ப்பவன் அல்லது ஓதுபவன் என்றே பொருள்படும். பார்ப்பான் என்ற சொல் ஒரு திரிசொல்; அரிதாகப் பயன்படுத்தப்படும் சொல். திருக்குறள் முழுமையும் இச்சொல் ஒரே இடத்தில்தான் ஆளப்பட்டுள்ளது. உலக வழக்கில் கூட ஒருவர், 'இந்த நூலைப்பார்; அந்தநூலைப் பார்'

என்று கூறுவதுமுண்டு. நூல்களை ஆராய்பவரும் பார்ப்பார் எனப்படுவர். 'பார்ப்பர்த்தப்பிய கொடுமையோர்க்கும்' என புறநானூறு கூறுவதும் காண்க. இங்குப் பார்ப்பார் என்பது 'அறிவர்' அல்லது 'அறம்' உரைப்போர் எனப்பொருள்படும் பார்ப்பார் என்பதனை சிந்தித்துப் பார்ப்பார், ஆராய்ந்து பார்ப்பார் என்னும் பொருளில் சேக்கிழாரும், ஆண்டுள்ளார்.

"மற்றுஅவர் பிழிந்து வார்த்த மருந்தினால் திருக்காளத்திக்
கொற்றவர் கண்ணிற் புண்ணீர் குறைபடாது இழியக் கண்டும்
இற்றையின் நிலைமைக் கென்னோ? இனிச்செயல் என்று பார்ப்பார்
உற்றநோய்தீர்ப்ப 'ஊனுக்கு ஊன்' எனும் உரைமுன் கண்டார்"
- (பெரியபுராணம்: கண்ணப்பர்)

இப்பாடலில் வரும் பார்ப்பார் என்பது அப்பொருள் பட்டமை காண்க. இவ்வாறு கொள்ளவே இக்குறளுக்கு நேரிய உரை காண முடியும்.

"பார்ப்பான் மறப்பினும் ஓதிக்கொளலாகும் - (அறநூல்களைப் பார்க்கும்) அறிவன் அல்லது அந்தணன்தான் நாளும் பார்க்கும் நூற்பொருளை மறந்தானாயினும், அதனை மீண்டும் ஓதிக்கொள்ளலாம்; பிறப்பு ஒழுக்கம் குன்றக்கெடும் - மானுடப்பிறப்பு (உயர்ந்த தாயினும்) ஒழுக்கம் சிதையுமாயின் பயனற்றும் போகும்"

இங்குப் 'பிறப்புக்கெடும்' என்பது பிறவிப் பயன் ஒழியும் என்பதாம் (அரிது அரிது) மானுடராதல் அரிது; ஞானமும் கல்வியும் நவில்தல் அதனினும் அரிது'. ஆதலால் இத்தகு மானுடப் பிறவி ஒழுக்கம் இல்லையாயின் பயனின்றாம் என்பது இவ்வாறு உரைகொள்வதே திருவள்ளுவரின் சிந்தனைக்கு ஏற்றதொன்றாம்.

இனி வெருவந்த செய்யாமை என்ற அதிகாரத்துள் வரும்,

"செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்"

என்ற குறள் சிந்தித்து மகிழத்தக்கதாகும். இதற்குப் பரிமேலழகர் கண்டுள்ள உரை பெரிதும் மெச்சத்தக்கதாம். அது வருமாறு:

"செரு வருவதற்கு முன்னே தனக்குப் புகலாவதோர் அரண்
செய்துகொள்ளாத அரசன், அது வந்தகாலத்து ஏமமின்மை
யான் வெருவிக் கடிதிற் கெடும் என்றவாறு"

இக்குறட்பாவில் தொடர்கள் கிடக்கை முறையிற் பொருள் கொள்ளப்படுமாயின் பொருள் நலிந்துபடும் என்பதைனை உணர்ந்த பரிமேலழகர், 'சிறை செய்யாவேந்தன் செரு வந்தயோழ்தில் வெருவந்து வெய்து கெடும்' என்று சொற்களைப் பிரித்துக் கூட்டிப் பொருள் கண்டுள்ளமை வியத்தற்குரியதாகும். பாடல் கிடக்கைமுறையில் பொருள் கொள்ளப்பட்டால், 'செரு வந்தபோது தற்காப்புச் செய்து கொள்ளாத வேந்தன்' என்று பொருள்படும். வேந்தன் தன்னையும் குடிகளையும் பிறபகை வேந்தர் தாக்குதலினின்று காக்கக் கடமைப்பட்டவன். அவன் முன் யோசனையுடன் போர் வரும் என்று எதிர்பார்த்து அது வருதற்கு முன்னரே தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும் என்பது போர் உத்தியாகும் சான்றாக 1962-ஆம் ஆண்டில் நடைபெற்ற சீன - இந்தியப்போரைக் காட்டலாம். அன்றைய பிரதமர் பண்டிதநேரு அவர்கள் விரிந்த உள்ளத்துடனும் திறந்த மனத்துடனும், 'யாரொடும் பகை கொள்ளாது' அனைத்து நாடுகளுடனும் நட்புக் கொள்ளும் மேலான நடுநிலைக் கொள்கையை கடைப்பிடித்து வந்தார். சீனநாட்டுடனும் மிகுந்த நேசமும் பாசமும் காட்டிச் சீனநாடு. ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெறுதற்கும் பாடுபட்டார். அதனால் அவர் இந்தியாவை எந்நாடும் படை எடுக்க நினைக்காது என்று கருதி இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்குரிய ஆக்க முறையிலான செயல் திட்டங்களுக்கே பெரும் பொருள் செலவிட்டார். படைப்பெருக்கம் பற்றி அவர் சிந்திக்கவே இல்லை. ஆயின் நடந்தது யாது? எதிர்பாராத வகையில் திடீரென இந்தியாவின் மீது சீன படையெடுத்தது. அப்போது நாம் போருக்குத் தயார் நிலையில் இல்லாததால் நம் படைகள் பின்வாங்க நேரிட்டது. இத்தகு சூழ்நிலை வாராமல் தடுக்கவே திருவள்ளுவர் மிகவும் கவனமாக இக்குறட்பாவை அமைத்துள்ளார் எனலாம். அதனினும் பரிமேலழகர் இந்த உண்மையை நன்கு உணர்ந்து மிகவும் நுட்பமாக இக்குறளின் தொடரை முன்பின்

மாற்றிப் பொருள் கொண்டது வியப்பினும் வியப்பாகும். இவ்வுரை பரிமேலழகரின் நுண்மாண் நுழைபுலத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

புகழ் என்னும் அதிகாரத்தில் அமைந்துள்ள ஒரு குறள் ஆய்வாளர் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. மிகச் செறிவான அக்குறள்,

"நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது"

என்பதாகும். இக்குறளுக்கு மணக்குடவர்,

"ஆக்கம் போலக் கேடும் உளதானாற்போலச்
சாதலும் வல்லவர்க்கு அல்லது அரிது"

என்று பொருள் கூறுவர். பரிமேலழகர்,

"புகழுடம்பிற்கு ஆக்கமாகும் கேடும், புகழுடம்பு உளதாகும், சாக்காடும் சதுரப்பாடு உடையவர்க்கல்லது இல்லை". 'போல் - உரையசை' என்று சிறிது விளக்கமுறப் பொருள் கண்டுள்ளார். மேலும் அவர்,

"ஆக்கமாகும் கேடாவது புகழுடம்பு செல்வமெய்தப் பூதவுடம்பு நல்கூர்தல்; உளதாகும் சாக்காடாவது புகழுடம்பு நிற்கப் பூதவுடம்பு இறத்தல், நிலையாதனவற்றால் நிலையின எய்துவார் வித்தக ராகலின், 'வித்தகர்க்கு அல்லால் அரிது' என்றார்." என்று விரித்தும் விதந்தும் விளக்கிப் போந்தார். இனிக் காளிங்கர்,

"வலம்புரிச் சங்கானது தன்னிலை குலைந்து பிறர் கைப்படினும் தன் பெருமை குன்றாதது போல இல்லறம் இயற்றும் நல்லறிவாளர் தாம் வாழுமிடத்தும் கெடுமிடத்தும் தம்புகழ் விளங்கக் கெடுவதோர் கேடும், அதுவே அன்றி, மற்றிறந்துபடினும் விரி புகழ் விளைக்கும் அல்லது மற்றுளோர்க்கு என்றும் அரிது என்றவாறு". எனப் 'போல்' என்ற உவம உருபுக்கும் பொருள் கொண்டு விரிவுரை பகர்ந்தார். மணக்குடவர், பரிதியார், காளிங்கர் ஆகிய மூவரும் இக்குறளில் வரும் 'போல்' என்பதனை உவம உருபாகக் கொள்ளவும், பரிமேலழகர் மட்டில் அதனை உரையசை' என்பாராயினர். 'நத்தம்' என்பதற்குச் சங்கு அல்லது வலம்புரிச் சங்கு என்று பிறர் பொருள் கொண்டிருப்பவும் பரிமேலழகர் ஆக்கம் (வளர்ச்சி) என்று பொருள் கொண்டுள்ளார். இவற்றுள் எது பொருந்தும்? என்பது கேள்வி. திருவள்ளுவர் இக்குறட்பாவால்

உணர்த்தக் கருதியது யாது? என்பது நீண்ட சிந்தனைக் குரியதாகிறது. பரிமேலகழர், இக்குறளில் வரும் 'ஆகும்' என்பதனை முன்னும் கூட்டி, அரிது என்பதனைத் தனித் தனிக் கூட்டியுரைக்க என்பர். அதன்படி,

'நத்தம் (ஆகும்) கேடும் (அரிது); உளதாகும் சாக்காடும் அரிது. இது வித்தகர்க்கே இயலும்;

என்று சொற்களை முன்னும் பின்னும் கூட்டி உரைகாண வேண்டியுள்ளது. இது பரிமேலழகரின் அறிவுக் கூர்மையைப் புலப்படுத்துகிறது என்பதில் ஐயமில்லை. அஃதாவது நத்தம் - வளர்ச்சி அல்லது ஆக்கம் அல்லது செல்வம்;

கேடு - குன்றுதல் அல்லது வறிதாதல்;

உளதாகும் - நிலையாகும் அல்லது அழியாது;

சாக்காடு - இறப்பு அல்லது உடம்பு அழிதல்; இங்ஙனம் பொருள் கொண்டால், ஒருவன் தனது பூதவுடம்பை வளர்த்துக் கொள்ளாமல் புகழுடம்பை வளர்ப்பதும், வளர்ந்த புகழுடம்பை (புகழினை) இங்கு நிலைபெறச் செய்து பூதவுடம்பை இழந்து விடுவது என்பது அனைவராலும் செய்யத்தக்க எளிய செயலன்று; அரியவற்றுள்ளும் அரிய செயலாகும். அஃதாவது அழியத்தக்க உடம்பின் வாயிலாக என்றும் அழியாது நிலைத்து நிற்கும் புகழினை அடைவது என்பது சதுரப்பாடுடையவர்க்கே இயலும் என்பதாம். இங்குக் கூறியவற்றால் இக்குறளுக்குப் பரிமேலழகர் கண்ட உரை சாலச் சிறந்ததாகவே தோன்றுகிறது.

இனிப் பெருமை என்னும் அதிகாரத்துள் வரும் ஒரு குறட்பா ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அது கீழ்வருமாறு:

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்"

இக்குறட்பாவில் கவனத்திற்கும் ஆய்வுக்கும் உரிய தொடர்கள் மேலிருத்தல், கீழிருத்தல் என்பனவாகும். இதற்குப் பரிமேலழகர் பின்வரும் உரை கண்டுள்ளார்.:

"செயற்கரிய செய்கலாது சிறியராயினார் உயர்ந்த அமளி முதலியவற்றின் மிசை இருந்தாராயினும் பெரியராகார்; அவை செய்து பெரியராயினார் தாழ்ந்த வறுநிலத்து இருந்தாராயினும் சிறியராகார் என்றவாறு' மேலும் அவர், "மேலிருத்தல் கீழிருத்தல்களால் செல்வ நல்குரவுகளும், மேல் கீழ்களால் பெருமை சிறுமைகளும் கருதப்பட்டன. இனி மணக்குடவரும் காளிங்கரும் மேலிருத்தல் கீழிருத்தல்களுக்குச் செல்வம், வறுமை

என்றே பொருள் கொண்டுள்ளனர். ஈண்டு 'இருத்தல்' என்பதற்கு அமர்தல் அல்லது உட்காருதல் என்று பொருள்கொண்டு பரிமேலழகர் அதற்கேற்ப அமளி (உயர்ஆசனம்) என்றும் 'வறுநிலம்' அஃதாவது 'தரை' எனறும் பொருள் உரைத்தார். 'இருத்தல்' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்வதினும் வீற்றிருத்தல்' அல்லது மேலான பதவியில் (நிலையில்) பெருமிதத்துடன் அமர்ந்திருத்தல் என்று பொருள் கொள்வதே சாலச் சிறந்ததாகும். உயர்ந்த பதவியில் வீற்றிருந்தும் அப்பதவிக்குரிய குணமும் பண்பும் ஒழுக்கமும் நேர்மையும் திறமையும் இல்லாத ஒருவனைவிட, மிகவும் தாழ்ந்த பதவியில் அவனுக் கீழ் பணியாற்றுபவன் ஒருவன் தனது பதவிக்குரிய கடமையாற்றல், கீழ்ப்படில், ஒழுக்கம், வாய்மை முதலிய அரிய குணங்களுடன் இருப்பானாயின் அவனே முன்னவனினும் உண்மையில் பெருமைக்குரியவன் என்பது இக்குறட்பாவின் நேரிய பொருளாகக் கருதப்படல் வேண்டும். இக்காலத்தில் பதவி ஏற்றம் உடைய ஒருவன் அதனாலேயே பெருமைக்குரியவன் என்று பொதுவாகக் கருதப்படுதலின், திருவள்ளுவர் உண்மை விளக்கம் தந்துள்ளார் எனலாம்.

திருவள்ளுவர் காலத்தும் அதற்கு முன்பும் சமுதாயத்தில் பொதுவாகக் குடிப்பிறப்பு, செல்வம், பதவி முதலியவற்றால் ஒருவன் மதிக்கப்படுவதும், அவை எல்லாம் அற்றோர் பிற சிறப்புக்கள் பெற்றிருப்பினும் மதிக்கப்படாத நிலையில் இருந்தனர் என்பதும் திருவள்ளுவர்க்கு உடன்பாடன்று. ஆகவே இக்குறட்பாவால் தமது கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

இனி நிலையாமை என்னும் அதிகாரத்துள் வரும் ஒரு குறட்பா சிந்தனைக்கு விருந்தாகும்.

> "குடம்பை தனித்தொழியப் புட்புறந் தற்றே
> உடம்போடு உயிரிடை நட்பு"

என்பது அது. இதற்குப் பரிமேலழகர் அரிதின் முயன்று தமது நுண்மாண் நுழை புலத்தால் மிக விரிவாகவும் நுட்பமாகவும் உரை கண்டுள்ளார். இக்குறட்பாவும் மாறுபட்ட உரைக்கு இலக்காகி நிற்கிறது. இதற்குப் பரிமேலழகர்,

> "(முன் தனியாத) முட்டை தனித்துக் கிடப்ப (அதனுள் இருந்த புள்ளுப் (பருவம் வந்துழிப்) பறந்து போன தன்மைத்து. உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு"

என்று பொருள் கொண்டுள்ளார். இவ்வுரையுள் வரும் "முன் தனியாத', 'அதனுள் இருந்த', 'பருவம் வந்துழி' என்ற தொடர்கள் பரிமேலழகரால் வருவித்துக் கொள்ளப் பட்டவையாகும். குறட்பாவில் இவற்றிற்கேற்ற மூலச் சொற்கள் இல்லை. இக்குறட்பாவில் வந்துள்ள. 'தனித்து' என்பதனால் 'முன் தனியாத' என்பதும், 'முட்டை' என்பதனால் 'அதனுள்ளிருந்த' என்பதும், 'பறந்தற்றே' என்பதனால் 'பருவம் வந்துழி' என்பதும் ஊகித்துப் பொருத்தமுறப் பெறப்பட்டனவாகும். இது பரிமேலழகரது கூர்த்த மதிக்கு எடுத்துக் காட்டாகும்.

மேலும் விளக்க முற்பட்ட பரிமேலழகர், "தனித்தொழிய' என்றதனான், முன் தனியாமை பெற்றாம். அஃதாவது, கருவும் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்; அதனால் அஃது உடம்பிற்கு உவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமல் போகலின் புள் உயிர்க்கு உவமையாயிற்று" என்றும், "முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினார், பறந்துபோதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின்" என்றும் விரித்துரைத்தார். இங்கு,

உயிர் - சேதனம், அரு, நித்தம்
உடல் - அசேதனம், உரு, அநித்தம்

இவ்வாறு இருவேறு இயல்பினவாகிய இரண்டும் கூடியிருப்பது வினைவயத்தாலல்லது பிறிதில்லை என்பதாம். 'நட்பு' என்பது ஈண்டுக் குறிப்பு மொழியாய் அவற்றிற் கிடையேயான 'நட்பின்மையைக்' குறித்தது.

இனிக் 'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என உரை கண்டவர்களும் உண்டு. மணக்குடவரும் காளிங்கரும் இவ்வாறு பொருளுரைத்தனர். இனிப் பரிதியாரோ, 'பட்சிமுட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும்; ஆகையினாலே யாக்கை உள்ளபொழுதே தன்மம் செய்வான் என்றவாறு' என்று சிறிதும் இயையின்றித் தமக்குத் தோன்றியவாறு உரைத்துப் போயினார்.

'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என்று பொருள் கொண்டது எத்துணைப் பொருத்தமின்மையுடையது என்பதனைப் பரிமேலழகர் தக்க முறையில் மறுத்துள்ளமை வியத்தற்குரியதாம் கூடு,

1. புள்ளுடன் தோன்றவில்லை' புள்வேறு. கூடுவேறு; இரண்டும் ஒன்றாகத் தோன்றவில்லை. ஆயின் முட்டை என்று பொருள் கொள்ளின் 'முட்டையும் கருவும் (குஞ்சு))' ஒன்றாகவே தோன்றியவை. இந்நயம் உணரத்தக்கது.

2. கூட்டைவிட்டுப் பறந்துபோன பறவை மீண்டும் அக் கூட்டை அடைய முடியும் ஆனால் முட்டையினின்று குஞ்சு வெளிப்பட்டுவிட்டால், அது மீண்டும் முட்டையுள் புக்குக் கருவாகாது இவ்வேற்றுமையைப் பிற உரையாசிரியன்மார் உணர்ந்ததாகத் தெரியவில்லை

இக்காரணங்களால் உடம்பிற்கு உவமை ஆகாமை அறியப்படும் என்பர் பரிமேலழகர்

அடுத்துத் தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் வரும்;

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்"

என்னும் குறட்பா சிந்தனைக்கு உரியது. பரிமேலழகர் இக்குறட்பாவிற்குத்தான் மிக விரிவானவுரை எழுதியுள்ளார். அவர் உரையும் விளக்கமும் வருமாறு.

"அரசனால் தெளியப்படுவான் ஒருவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் திறத்தான் மன இயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும் என்றவாறு". உபதை - சோதனை. இவரது உரையும் உரை விளக்கமும் முற்றிலும் வடநூல் முறையைத் தழுவியதாகும். திருவள்ளுவர் கருதியதற்கு மாறானதாகும். பரிமேலழகரே, 'இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப்பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்' எனக் கூறியுள்ளார். வேறு சில இடங்களில் வடநூன் முடிவுகள் திருவள்ளுவர் கருத்திற்கு முரணானவை என்று துணிந்து மறுக்கும் பரிமேலழகர் இக்குறட்பா உரையில் முழுக்க முழுக்க வடநூல்களாகிய காமந்தகம், அருத்த சாத்திரம் ஆகியவற்றில் கண்டுள்ளவற்றை மேற்கொண்டு பொருந்தா விளக்கம் தருவது புரிந்துகொள்ள இயலாத ஒன்றாக உள்ளது.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில்
அறிமுகப்படுத்தும்

# மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள அரிய வாய்ப்பு

## திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்த பரிசோதனை
   * இரத்த வகை
   * சர்க்கரை அளவு
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.
   * சீரம் கிரியேட்டினைகள்
   * கொலஸ்ட்ரால் அளவு

## கூடுதல் பலன்கள்

* இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
* இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு பார்த்தல்
* இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்கள் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

## இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50 செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

Only private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O. Ms. No. 4901/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.
Ph : 536361 (8 Lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்

அன்பு அச்சகம், மதுரை - 1.